இருக்கின்ற வார்த்தையைப் பொறுத்தவரையில் நடவு நடக்கூடிய அத்தனை பேர்களுக்கும் இந்தக் கூலி பொருந்தக்கூடிய வகையில் சிறுவர்கள் என்ற வேறுபாடு பார்க்காமல் இருக்கக்கூடிய முறையிலே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இது சம்பந்தப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவது பற்றி அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக இங்கே நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். இது மிராசுதார்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தின் காரணமா என்று தகவல் தெரியவில்லை. அப்படி போராட்டத்தின் காரணமாக ஏற்பட்டது என்று தெரிந்தால் நான் முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்கிறேன்.

ஆ. யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலை ஏற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலைகள் சமீபத்தில் அதிகமாக உயர்ந்துவிட்டதால் விவசாயிகள் படும் இன்னல்குறித்து திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ''யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலைகள் சமீபத்தில் அதிகமாக உயர்ந்துவிட்டதால் விவசாயிகள் படும் இன்னல் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

11-7-81 முதல் இரசாயன உரங்களின் விலைகள் மத்திய அரசால் உயர்த்தப்பட்டுள்ளன. சிலவகை உரங்களின் விலை உயர்வு கீழ்வருமாறு:—

	பழைய விலை. (ரூ. டன்னுக்கு)	புதிய விலை. (ரூ. டன்னுக்கு)
யூரியா (46% என்)	2,000	2,350
என். பி. கே 17:17:17	2,200	2,600
டி. ஏ. பி.	3,050	3,600

TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 25] [திரு. க. காளிமுத்து]

இரசாயன உரங்களின் விலைகளை மத்திய அரசு நிர்ணயிக்கின்றது. இவற்றின் விலைகளை ஏற்றவோ, குறைக்கவோ மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, உரங்களை சிக்கனமாக சிறந்த வகையில் உபயோகப்படுத்தி மிக அதிக அளவில் விளைச்சல் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வகையில் சிபாரிசு செய்யப்பட்டு நடைமுறையிலுள்ள சில நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) மண் பரிசோதனை முடிவுப்படி உரமிடுதல்,

(2) குறித்த காலத்தில் உரமிடுதல், இலைமேல் உரத் தெளிப்பு, நாற்றங்காலுக்கு உரமிடுதல் போன்ற முன்னேற்றமான சாகுபடி முறைகளைக் கையாளுதல்.

(3) பயிர்கள் முழுமையாக பயனடைய வேர் பகுதியில் குறித்த ஆழத்தில் உரம் வைத்தல்.

(4) இரசாயன உரங்களுக்கு உப உரமாக அமைந்துள்ள நீலப் பச்சை பாசி போன்ற உயிரின உரங்கள் உபயோகித்தல்.

குறித்த அளவில் இரசாயன உரம் மற்றும் உயிரின உரங்கள் இடுவதன் மூலம் உரத்திற்காகும் செலவினங்களைக் குறைத்து விவசாயிகளுக்கு நிகர லாபத்தை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, தமிழக விவசாயிகள், அதிலும் குறிப்பாக இப்பொழுது செய்யப்படும் நவீன விவசாயத்தில் இரசாயன உரம் இல்லாமல் பயிரிட முடியாது என்பதை அரசு அறியும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு உரத்தின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு உயர்த்தியிருந்தாலும் சரி, அதைக் குறைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசோடு பேசியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, பேசியது; கடிதம் எழுதியது; பலன் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, விவசாயிகளினுடைய நலன் கருதியும், தமிழக மக்கள் அரிசி உணவை உட்கொள்வதாலும், நெல்லின் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கப்படும் வகையில் மாநில அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, அதற்கான சாத்தியம் இல்லை. ஆகவே, எப்படிச் சிக்கனமாக உரத்தைப் பயன்படுத்துவது என்று அறிந்து கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, பாலிடால் போன்ற இரசாயன உரங்களில் (குறுக்கீடு) பூச்சிக் கொல்லி மருந்துகளில் மண்ணெண்ணெயைக் கலந்து வியாபாரிகள் விற்கிறார்கள். எனவே, விவசாய வேளாண் சங்கத்தின் மூலமாகப் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா? கலப்படம் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய ஒன்று. ஆனால் இந்தத் துறையே அந்த வியாபாரத்தைச் செய்ய இயலாது. இதற்கு வேறு பணிகள் இருக்கின்றன.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"1972-73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான பொதுக் கணக்குக் குழு (1977-78) அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை"

அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.